4498
3127/17

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)(பொ.) அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர்: திரு.அ.ஜான்கென்னடி, எம்.எஸ்.சி.,**

**ந.க.எண்.ந3/ 31791/2022** **நாள்: 03.11.2022**

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு- திருநெல்வேலி மாவட்டம்- ஊராட்சி செயலாளர்களுக்கான 20% இட ஒதுக்கீட்டில் 2020-2021-ம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் மீது தேர்வாணைய இசைவு பெறப்பட்டது - பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் நிலையில் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித எண். 511/சிடி-அ3/2022 நாள்: 11.07.2022 (அரசுச் முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை)-க்கு முகவரியிட்டது.
2. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.67017/2021/பி3 நாள்:11.08.2022.
3. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள்:26.08.2022.
4. தொடர்புடைய அலுவலகத் தலைவர்களிடமிருந்து வரப்பெற்ற பிரேரணைகள்.

--------

**ஆணை:**

திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் 2020-2021-ம் ஆண்டில் இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை 2/ காசாளர் நிலையில் ஏற்பட்ட காலிப்பணியிடங்களில் ஊராட்சி செயலர்களுக்கான 20% இடஒதுக்கீட்டில் இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெறப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-2/காசாளர் நிலையில் பணிநியமனம் வழங்கப்பட்ட பின்வரும் பணியாளர்களின் இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை -2/ காசாளர் நிலையிலான பணியினை அவர்களுக்கெதிரே கலம் எண் 4-ல் குறிப்பிட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை-2/ காசாளர் நிலையில் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் | இளநிலை உதவியாளராகப் பணியேற்பு செய்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | திருமதி.P.சீனிச்செல்வி, ஊர்நல அலுவலர் நிலை-2 மானூர் ஊராட்சி ஒன்றியம். | 26.08.2022 பி.ப. | 26.08.2022 பி.ப. |
| 2. | திரு.S.கண்ணன், காசாளர், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம். | 01.09.2022 மு.ப. | 01.09.2022 மு.ப. |

பணிவரன்முறை செய்யப்பட்ட . விவரம் சம்பந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேட்டி உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

3.11.22

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)(பொ.),
திருநெல்வேலி.

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (உரிய வழியாக)

03/11/22

நகல் 1. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)/(கி.ஊ), மானூர்/நாங்குநேரி

2. ஈ3 பிரிவு